DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM
**STC.No.468/2016**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | PW 2 | Caste | : | |
| Name | : | இராமசந்திரன் | Age | : | |
| FN. | : | | Occupation | : | |
| Village | : | | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 01st day of November 2022.
01.11.2022.

முதல் விசாரணை:-

1. நான் தமிழ்நாடு காவல்துறையில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று எனது சொந்த ஊர் நன்னிலான் கிராமத்தில் வசித்து வருகிறேன். கடந்த 2014-ம் வருடம் இராமேஸ்வரம் கோவில் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது 02.03.2014-ம் தேதி காலை 10 மணிக்கு இராமேஸ்வரம் ஜெட்டி பக்கமாக நானும், சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.நடராஜன் மற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.பொந்துமுனியாண்டி ஆகிகோயர்களுடன் விசைபடகில் இருமுடி வலை பயன்படுத்துவதை கண்டித்து நாட்டுபடகு மீனவர்கள் எதிர்ப்பு தெரிவித்தை முன்னிட்டு இராமேஸ்வரம் ஜெட்டியில் பாதுகாப்பு பணியில் இருந்து வந்தோம்.

2. அப்போது இராமேஸ்வரத்தில் இருந்து தனுஷ்கோடி NH 49 நெடுஞ்சலையில் NSK வீதியில் அருகில் உள்ள தேவர் சிலை முன்பாக மீனவர் சங்கத் தலைவர் ஜேசுராஜ் தலைமையில் மற்றும் இவ்வழக்கில் கண்ட 10 எதிரிகள் சட்டவிரோதமாக ஒன்றுகூடி தேவர் சிலை முன்பாக நெடுஞ்சலையில் ரோட்டை மறித்துக்கொண்டு மறியல் செய்ய முற்பட்டவர்களை நாங்கள் சென்று 30(2) police Act அமலில் இருக்கும் போது போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் இடையூராக ஏன் இப்படி மறியல் செய்கீறிர்கள் என்று கேட்டதற்கு அவர்களை அதனை கேட்காததால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோவில் காவல் நிலையம் சென்று சார்பு ஆய்வாளர் திரு.நடராஜன் சட்டவிரோதமாக ஒன்றுகூடியது மற்றும் police act அமலில் இருப்பது தெரிந்தும் சாலை மறியல் செய்த நபர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு ஆய்வாளர் அவர்களிடம்புகார் மனு கொடுத்தார். அந்த புகார் மனுவின் பெயரில் ஆய்வாளர் வழக்கு பதிவு செய்து என்னை விசாரித்தார்.